






மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, இன்று (09.12.2014) சென்னை, தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திரு.ந.சுப்பிரமணியன் அவர்கள் தலைமையில் தாட்கோ திட்டங்களை விரைந்து செயல்படுத்துவது குறித்து வங்கியாளர்கள் சிறப்புக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், தலைமைச் செயலாளர் திரு.கு.ஞானதேசிகன், இ.ஆ.ப., நிதித்துறை முதன்மைச் செயலாளர் திரு.கே.சண்முகம், இ.ஆ.ப., ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைச் செயலாளர் திருமதி.கண்ணகி பாக்யநாதன், இ.ஆ.ப., தாட்கோ தலைவர் திரு.எஸ்.கலைச்செல்வன், தாட்கோ மேலாண்மை இயக்குநர் திருமதி.ஆ.சுகந்தி, இ.ஆ.ப., மற்றும் வங்கியாளர்கள் கலந்து கொண்டனர்.

# பத்திரிக்கை செய்தி

09.12.2014 இன்று மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் சிறப்பு வங்கியாளர் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தாட்கோ மூலம் வங்கிகளுக்கு அனுப்பப்பட்டு, நிலுவையாக உள்ள 8300 கடன் விண்ணப்பங்கள் வங்கிகளில் தேக்கநிலையில் உள்ளது என்பது சுட்டிக்காட்டப்பட்டு, இவ்விண்ணப்பங்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுத்து ஏழை ஆதிதிராவிடர் பயனாளிகளுக்கு உதவிட வங்கியாளர்களை கேட்டுக்கொள்ளப்பட்டது.

வங்கிகளின் மூலம், படிவம்-III பெறப்பட்டு, அதன் அடிப்படையில் தாட்கோ நிறுவனத்தால், வங்கிகளுக்கு, 2537 தாட்கோ பயனாளிகளுக்கு வழங்கிட, விடுவிக்கப்பட்ட, மான்ய தொகை ரூ.37.44 கோடி இன்றும் வங்கிகளின் கணக்கிலேயே உள்ளது. இதேபோன்று, 87 பழங்குடியின பயனாளிகளுக்கு ரூ.1.69 கோடி வங்கிகளால் இன்றுவரை விடுவிக்கப்படாமலேயே உள்ளது என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்தியாவிலேயே தனி நபர்களுக்கு அதிகமாக மானியத்தொகை வழங்கிடும் ஒரே மாநிலம் தமிழ்நாடு மட்டும் தான். இத்திட்டம் **மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா** அவர்களால் கொண்டுவரப்பட்ட திட்டம் என்றும், அடித்தட்டு ஆதிதிராவிடர் மக்கள் பொருளாதாரத்தில் வளர்ச்சி பெற்று மேன்மை அடைந்தால்தான், பிற இனமக்களுடன் சமநிலையை எட்டமுடியும் என்றும், இத்திட்டம் அம்மா அவர்களின் தொலைநோக்குச் சிந்தனையால் உருவாக்கப்பட்ட திட்டம் என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். மேலும், இதனாலேயே **மாண்புமிகு புரட்சித் தலைவி**

**அம்மா** அவர்கள் ஆதிதிராவிடர் மக்களின் விடிவெள்ளியாக திகழ்ந்து வருகிறார் என்றும், ஆதிதிராவிடர் மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்ற ஒவ்வொரு வருடமும், சுமார் ரூ.150.00 கோடி மானியமாகவும், அதில் தனிநபர் திட்டங்களுக்கான வருவாய் ஈட்டக்கூடிய திட்டங்களுக்கு 30% மானியமாகவும், வங்கிகள் மூலம் மீதமுள்ள 70% தொகையினை வங்கிக்கடனாக வழங்கப்பட்டு வருகிறது எனவும், அதேபோல் மகளிர் சுயஉதவிக் குழுக்கள் தொழில் தொடங்கிட, 50% மானியமாகவும், 50% வங்கிக் கடனாகவும் வழங்கப்பட்டு வருகிறது என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார். இதே போன்று, பழங்குடியின மக்களும், பொருளாதார முன்னேற்றம் அடைய, கடன்தொகையில் 50% மான்யம் அல்லது ரூ.5.50 இலட்சம், இதில் எது குறைவோ, அத்தொகை வழங்கப்படுகிறது என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில், தலைமைச் செயலர் **திரு கு. ஞானதேசிகன், இ.ஆ.ப.,** நிதித்துறை முதன்மை செயலர் **திரு க. சண்முகம், இ.ஆ.ப.,** ஆதிதிராவிர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலர் **திருமதி கண்ணகி பாக்கியநாதன்,** இ.ஆ.ப., தாட்கோ மேலாண்மை இயக்குநர் **திருமதி ஆ. சுகந்தி, இ.ஆ.ப.,** ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குநர் **திரு எஸ். சிவசண்முகராஜா,** இ.ஆ.ப., **மாநில அளவிலான வங்கிகள் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர்** மற்றும் துறையைச் சார்ந்த, உயர் அலுவலர்கள், 50 வங்கிகளை சார்ந்த, வங்கிகளின் உயர் அதிகாரிகள் ஆகியோர் கலந்துக்கொண்டனர்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை—9**